99 தடுப்பூசியாளர்களுக்கும், 1985—86-ல் 82 தடுப்பூசியாளர்களுக்கும், கால்நடை ஆய்வாளர் 11 மாதப்பயிற்சி அளிக்கப்பட்டது. மீண்டும் 125 பேர்களுக்கு கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி கீரமங்கலத்தில் கால்நடை மருத்துவமனை.

455—(*வினா எண் 8120) திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கீரமங்கலத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் நிதியாண்டில் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீரமங்கலத்தில் ஏற்கனவே ஒரு கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. இக் கால்நடை மருந்தகத்தை, மருத்துவ மனையாக உயர்த்தும் திட்டம் எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், எழுமகளூர் ஸ்ரீமாரியம்மன் ஆலயத் திருப்பணி.

456—(*வினா எண். 10537) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், எழுமகளூர் ஸ்ரீமாரியம்மன் ஆலயத் திருப்பணிக்கு அரசு மான்யம் அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.